# NEWS LETTER

**Jaffna Science Association**

# செய்தி இதழ்

**யாழ் விஞ்ஞான சங்கம்**

Vol. 4 No. 3 March 1995

## FROM SECRETARY'S DESK

The 4th Annual Session of the Jaffna Science Association will be held during the 27th, 28th and 29th of April 1995 in the University of Jaffna, Sri Lanka.

Rt. Rev. Dr. S. Jebanesan, Bishop of Jaffna, will inaugurate the Annual Session on the 27th of April 1995 at 9-00 hrs.

The theme for this year's Annual Session is "Technology for our region". A theme seminar will follow the inauguration. Prof. K. Balasubramaniam, Mr. S Ruthiralingam, Mr. C Jeyaratnam, Dr. C. S. Nachinarkinian and Dr. S. Sivalingam are due to take part in the seminar. The seminar will cover bio technology, construction technology, agriculture technology, medical technology and fisheries technology.

Review lectures on (i) "Primary Health Care" by Dr. N. Sivarajah and (ii) "**Ptinus tectus** – a storage insect pest, suitable for concentrated investigation" by Prof. V. K. Ganeshalingam will be delivered on 28-04-1995 and 29-04-1995, respectively.

Prof. A. Sanmugadas, Head, Department of Tamil is scheduled to deliver a popular lecture on "Tamil Language for the Twenty-first Century" at 16-15 hrs. on the first day. Dr. A. Navaratnarajah, Dean of the Faculty of Agriculture and Prof. S. V. Parameshwaran, Dean of the Faculty of Medicine, University of Jaffna will deliver popular lectures.

Presentation of research papers will commence at 8-00 hrs. on the 28th April. Abstracts of thirty two research papers (Sections A – 09, B – 19, C – 02, and D – 02) were received for presentation at this year's Annual Session.

The 4th Annual General Meeting of the Association will be held on Saturday, 29th April, 1995 at 11-00 hrs. in the Physics Lecture Hall, University of Jaffna, with the President Prof. S. Mageswaran in the Chair.

The Sectional meetings of the four sections will be held immediately before the Annual General Meeting.

The Sectional Chairmen will deliver their respective addressess during the Annual Session.

The last item of the Annual Session is the Presidential address by Prof. V. Navaratnarajah which will commence at 14-00 hrs. at the Kailasapathy Auditorium on the 29th April, 1995.

Prizes and certificates for the winners in the quiz and speech contests in the Students Science Programme will be awarded during the Annual Session.

Two recommendations regarding membership have been made by the Executive Committee for incorporation in the constitution at the forthcoming AGM.

(i) Overseas life membership: Subject to conditions laid down in section 1.3, this membership is open to persons living abroad. The Annual overseas life membership fee shall be US $ 100/-.

(ii) Student membership: Open to students of any University in Sri Lanka, who have completed one year of study in the University. The Annual Subscription shall be Rs 50/-. The student members will be eligible to present papers, provided the co-author is an Ordinary or Life Member of JSA.

Members in arrears, please note that according to the Constitution of the Association (section 3 5) "Members who are in arrears of subscription exceeding two years shall not be entitled to participate at the Annual General Meeting or such other Special General Meeting". Out of the total 211 ordinary members 60 are in arrears of annual subscription exceeding two years and are on the verge of losing their membership on the day of the Annual General Meeting. The concession to become Life members by paying only Rs. 1000/- lasts upto the day of the Annual General Meeting – 29th April 1995.

Presence of the members at the Annual Sessions and AGM is greatly appreciated.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியர் தலையங்கம்

அறிவியலாளரின் கண்டுபிடிப்புக்களுக்கு அவர்களின் சிந்தனை வளமே மூலாதாரமாகும். தாய்மொழி என்ற ஊடகத்தில் ஒருவன் தனது சிந்தனா சக்தியை செலுத்தும்போதே அதன் உயர் வீச்சத்தைப் பெறக் கூடியவனாக இருப்பான். அதாவது, அறிவியலாளர் தமது தாய் மொழியில் அறிவியலைக் கற்றுத் தேர்ந்து ஆராய்ச்சிகளுக்காக சிந்திக்கும்போதே அவர்களால் வெளிக்கொணரப்படும் அறிவியல் கண்டுபிடிப்புக்கள் பிரமிக்கத்தக்கவையாக அமையும். அறிவியலை தாய்மொழியில் கற்கும் ஜேர்மானியர், யப்பானியர், அமெரிக்கர், பிரித்தானியர், பிரான்சுக்காரர் போன்றோர் அறிவியல் ஆய்வுகளில் முன்னிற்பதற்கு இதுவும் ஓர் காரணமாகும். இந்த யதார்த்த நிலையை உணர்ந்ததன் காரணத்தினாலேயே 1964-ம் ஆண்டு முதல் எமது நாட்டிலும் அறிவியல் தாய்மொழியில் கற்பிக்க ஆரம்பிக்கப்பட்டது. ஆனால் தாய்மொழியில் கற்றலுக்கு குறிப்பாக தமிழில் அறிவியலைக் கற்றலுக்கு பொருத்தமான புறநிலைகள் இன்றுவரையிலும் எமது பிரதேசத்தில் உருவாக்கப்படவில்லை.

அறிவியல் கதைகள் மூலமோ அல்லது பல கருத்துக்களை திரட்டிச் சேகரித்தல் மூலமோ பயிலக்கூடிய கற்கை நெறியன்று. அறிவியல் கோட்பாடுகளை ஆதாரமாகக் கொண்ட பிரச்சினைகளின் தீர்வைப் பல கோணங்களில் அணுகுவதன் மூலமே அறிவியல் தத்துவங்களை விளங்கிக் கற்கமுடியும். எனவே, எமது மாணவர்களுக்கு அறிவியல் கோட்பாடுகளையும், அவற்றைப் பல கோணங்களில் அறிமுகம் செய்யக்கூடிய பிரச்சினைகளையும் கொண்ட புத்தகங்கள் தமிழில் பெறக்கூடியனவாக இருக்க வேண்டும்

இவ்வகையான புத்தகங்கள் இல்லாதவிடத்து அறிவியல் விளக்கங்களின் தேடுதலுக்காக பாடசாலை கல்விக்கு மேலதிகமாக தனியார் கல்வி நிறுவனங்களை அணுகுதல் தவிர்க்க முடியாததாகும். தனியார் கல்வி நிறுவனங்கள் 1967 – 68-ம் ஆண்டளவில் அதாவது தமிழ்மொழிமூலம் அறிவியல் ஆரம்பிக்கப்பட்ட ஓரிரு ஆண்டளவில் பிரபல்யமடையத் தொடங்கியதும், ஆரம்பத்தில் அவை அறிவியல் பாடங்களைக் கற்பித்தமையும் இதற்கு சான்றாகும். ஆனால், தனியார் நிறுவனங்களின் கற்பித்தல் முறைகள் அறிவியல் மாணவர்களுக்கு தேவையான சிந்தனையாற்றலை வளர்ப்பதற்குப் பதிலாக மழுங்கடிப்பவையாக அமைந்துவிட்டன.

எனவே, இன்றைய தமிழ் அறிவியலாளர் முன்னுள்ள பிரதான கடமைகளில் ஒன்று எமது மாணவர்கள் பயன்பெறக்கூடிய வண்ணம் அறிவியல் புத்தகங்களை தமிழில் உருவாக்கலே. புதிய புத்தகங்களை எழுதுதல் கடினமானதும், காலத்தை எடுக்கக்கூடியதும், கவனமாகச் செய்யவேண்டிய காரியமுமாகும். ஆனால், பிறமொழிகளிலுள்ள சிறந்த அறிவியல் நூல்களை தமிழாக்கல் இலகுவாகச் செய்யக்கூடிய தொன்றாகும். ஆனால், தமிழாக்கலின்போது அறிவியல் கருத்துக்கள் பிறழ்ச்சியடையாமலும் மயக்கத்தை உண்டுபண்ணாமலும் தமிழ்ச் சொற்பதங்களை உபயோகித்தல் மிகவும் இன்றியமையாததாகும். இம்முயற்சி வெற்றிகரமாக அமைய இன்றைய நிலையில் தமிழ்மொழியாளருக்கு உள்ள பங்கு மிகவும் பெரிதாகும். எத்தனையோ தமிழ் அறிவியல் சொற்பதங்கள் மயக்கத்தை உண்டுபண்ணுபவையாகவும் அறிவியல் கருத்துக்களைச் சரியாக பிரதிபலிக்காதவையாகவும் உள்ளன. உதாரணமாக, இலக்கங்களில் ஒன்றுக்களை குறிக்கும் சொற்பதங்களில் ஒன்பது என்ற சொல் இலக்கங்களில் பத்துக்களைக் குறிக்கும் ஒலிவடிவை உடையதும் மயக்கத்தை உண்டுபண்ணக் கூடியது.

ஆரம்பத்தில் ஒன்பது குறிக்கும் இலக்கம் ''தொட்டு'' அல்லது ''தொன்னு'' என்ற சொல்வடிவங்களால் அழைக்கப்பட்டது என்ற கதைகளும் உள்ளன. இவ்வகையான சொற்களுக்கு பதிலாக புதிய சொற்களை உருவாக்குதல் நல்லது. மேலும், பல அறிவியல் கருத்துக்களை தெளிவாகவும் உறுதியாகவும் குறிக்கக்கூடிய சொற்பதங்கள் தமிழில் இல்லை. உதாரணமாக, Tunnel effect, Degenerate, Decle-nation இவை போன்ற பல ஆங்கில சொற்கள் குறிக்கும் அறிவியல் கருத்துக்களை பிறழ்ச்சியடையாமல் தெளிவாகக் குறிக்கக்கூடிய தமிழ்ச் சொற்கள் உபயோகத்தில் இல்லை. எனவே, எமது அறிவியல் மாணவர்களின் தேவையை பூர்த்தி செய்வதற்கு எம்முன் பாரிய கடமையொன்று உள்ளது, முயல்வோமா !

## Jaffna Science Association

The following categories of memberships are available :

★ **Ordinaiy Member :**
**100 Rs. per annum**

★ **Life Member :**
**100 Rs.**

★ **Institutional Member :**
**100 Rs. per annum**

Applications for memberships should be made on Association's application form and should be forwarded with an appropriate remittance to the Association's Office in Dept. of Botany, University of Jaffna, Jaffna.

Application forms are also available at the following address :

The General Secretary,
JSA,
University of Jaffna,
Jaffna,
Sri Lanka.

*Note*: **Membership cannot be granted until the last year's dues have been received by the association.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ACTIVITIES

### An Exhibition was Organized by

SECTION C FROM 2ND TO 11TH APRIL 1995 AT THE FACULTY OF MEDICINE

This exhibition was meant to educate the members of the public for a healthy life by providing the right information. At a time when health services are at their lowest ebb, health education for prevention of diseases assumes great importance. It is with this view that this exhibition was contemplated, planned and conducted To aid in this task, models of body systems and organs, specimens - normal and abnormal together with posters - printed and hand written with appropriate illustrative diagrams were on display. Medical students and staff of the Medical Faculty were providing explanations. There were 9 sections, each highlighting the more common conditions prevalent in our region. To illustrate, the following are listed.

1. Central Nervous system – The Human Brain, its anatomy and physiology, special senses, tumours, stroke etc.
2. Genito - Uninary Tract – Common disorders of the genital tract-male and female, pregnancy-normal and abnormal, kidney and associated parts, tumours and cancer.
3. Psychiatry and Psychology – Development of psychology, Psychological Development of child, Memory and learning, mental illnesses, Psycho-sexual disorders, Alcoholism and Drug abuse
4. Respiratory and Cardiovascular system – Lung, breathing, common lung diseases, cancers, T. B. asthma.
   Blood, anaemias, blood donation, Heart and heart diseases.
5. Oral and Dental Health – Dental and Oral hygiene, prevention of common oral conditions, advice on treatment and types of treatment available. Teeth malformations, injuries and cancer.
6. Endocrinology – Diabetes, Thyroid disorders congenital conditions-cretinism, Gigantism, family planning-contraceptives in family planning.
7. Gasrto-Intestinal system – Worms in intestinal tract, Diarrhoea, common Liver diseases, Ulcers and Cancer.
8. Miscellaneous group – Contagious diseases, Parasites, Rabies, Leprosy, Snake bite, First aid, AIDS and sexually transmitted diseases.
9. Suggestions for Healthy Life – Exercise, Relaxation, advice on proper housing, environmental sanitation, personal hygiene, food and food habits, nutrition for various age groups and special groups, breast feeding.

Though this exhibition was primariyl directed towards the general public it had its relevance to school students - especially A/L students doing biological sciences.

This exhibition was jointly organised by the JSA, The Medical Faculty of Jaffna and the Medical students Union. The contribution of the medical students is immeasurable.

2. Seminar for G. C. E. (A/L) Teachers in Political Science was conducted by Section-D On 23rd and 24th December 1994.
3. A joint lecture on "eye diseases" was delivered on 6th December 1994 by Dr. (Mrs.) I.Kannuthurai and Dr. Yogarajah.
4. A talk on "Elephant and Human Conflict" was delivered on 23rd March 1995 by Dr. Charles Santiyapillai, University of Peradeniya.
5. A lecture on 'Mixture Approach in Cluster Analysis' was delivered by Dr. S. Ganeshalingam, Senior lecturer, Massey University, New Zealand on 10th January 1995.
6. A joint lecture on Oral Health was conducted by Dr. (Miss) U. Sivapathasundaram – R.D.S. / Jaffna
   Dr. S. Rajaratnam – Private Practitioner, Dental Surgery.
   Dr.K.Kathirkamanathan – Dental Surgeon Tellipalai
   on February 1995.
7. வழமைபோல் இவ்வருடமும் யாழ்ப்பாண விஞ்ஞானசங்கம் விஞ்ஞான வினாவிடைப்போட்டியினையும் பேச்சுப் போட்டியையும் யாழ்மாவட்ட கல்லூரி மாணவர்களிடையே (க.பொ.த.உயர்தரம்) நடாத்தியது. இம்முறை வினாவிடைப் போட்டியானது மாணவர்களிடையே விஞ்ஞான பொது அறிவுத்தேடலை ஊக்குவிக்கும் படியாகவும் பாடவிதான நுணுக்கங்களை பரீட்சிப்பதாகவும் அமைந்ததுடன் பல மாணவர்கள் பங்குபற்றக் கூடிய முறையிலும் ஒழுங்கு செய்யப்பட்டது. இப் போட்டியின் முதற் கட்டமாக ஒவ்வொரு பாடசாலையிலிருந்தும் 10 மாணவர்கள் எழுத்துப் பரீட்சை ஒன்றிற்கு தோற்றுமாறு கேட்கப்பட்டிருந்தனர். இப் பரீட்சை 60 நிமிடங்களில் 30 வினாக்களுக்கு விடையளிக்க வேண்டியதாக அமைந்திருந்தது. இவ்வெழுத்துப் பரீட்சை பின்வரும் நிலையங்களில் 07-01-95 சனிக்கிழமை காலை 9-10இல் நடைபெற்றது.

| பரீட்சை நிலையம் | பங்குபற்றிய கல்லூரிகளின் எண்ணிக்கை |
|---|---|
| நெல்லியடி M.M.V. | 06 |
| சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி | 02 |
| இராமநாதன் கல்லூரி | 07 |
| வேம்படி மகளிர் உயர் கல்லூரி | 10 |
| | 25 |

மேற்படி நிலையங்களில் தோன்றிய 165 பரீட்சார்த்திகளில் பின்வரும் 10 மாணவர்கள் புள்ளி அடிப்படையில் வாய்மொழிப் போட்டிக்கு (oral contest) தெரிவு செய்யப்பட்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. G. Vasanthakumar, புனித யோவான் கல்லூரி, யாழ்ப்பாணம்
2. M. Aravinthan, யாழ் இந்துக் கல்லூரி
3. M. Kukatheepan, யாழ் இந்துக் கல்லூரி
4. S. Murugathas, யாழ் இந்துக் கல்லூரி
5. Miss V. Nanthiny, மெதடிஸ்த பெண்கள் பாடசாலை, பருத்தித்துறை
6. K. Nageswaran, கொக்குவில் இந்துக் கல்லூரி
7. Miss K. Navaratnam, கொக்குவில் இந்துக் கல்லூரி
8. S. Senthilkumaran, நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்
9. A. Thayananthan, சாவகச்சேரி இந்துக் கல்லூரி
10. Miss R. Sivapatham, உடுவில் மகளிர் கல்லூரி

இவர்கட்கான வாய்மொழி வினாவிடைப்போட்டி 21-01-95 யாழ்/இந்து மகளிர் கல்லூரியில் நடைபெற்றது, ஒவ்வொரு சுற்றிலும் போட்டியாளர் ஒவ்வொருவரிடமும் ஒரு கேள்வி அவர்கட்குரியதாக விடப்பட்டது, அவர் சரியான விடையளிக்கும் பட்சத்தில் 4 புள்ளிகளும், சரியான விடையளிக்காத விடத்து ஏனைய எல்லா போட்டியாளருக்கும் எழுத்து மூலம் விடையளிக்கும் சந்தர்ப்பம் வழங்கப்பட்டு, சரியான விடையளித்தோருக்கு 2 புள்ளிகளும் வழங்கப்பட்டன. இவ்வாறு நடந்த வாய் மொழிப் போட்டியில்.

1) Mr. G. Vasanthakumar (St John's College) 25 புள்ளிகளைப் பெற்று முதலாவது இடத்தையும்
2) Mr. A. Thayananthan (Chavakachcheri Hindu College) 24 புள்ளிகளைப் பெற்று இரண்டாவது இடத்தையும்
3) Mr. K. Mageswaran (Kokuvil Hindu College) 17 புள்ளிகளைப் பெற்று மூன்றாம் இடத்தையும் பெற்றனர்.

இவர்கட்கு சிறப்பாகவும், ஏனைய பங்குபற்றிய மாணவர்கட்கும் எமது பாராட்டுக்கள்


*SPONSORED BY*

# COMPASS

CAREER GUIDANCE SERVICE

"VIMALAM"
NALLUR CROSS ROAD, JAFFNA.


பேச்சுப் போட்டிக்கு ஒரு பாடசாலையில் இருந்து ஒரு மாணவன்/மாணவி மட்டும் கலந்து கொள்ளும்படி கேட்கப்பட்டிருந்தனர். அதன்படி 19 பாடசாலைகளிலிருந்து 19 போட்டியாளர்கள் 21-01-95இல் நடைபெற்ற இப்போட்டியில் கலந்து கொண்டனர்.

முதலாவதாக இப்போட்டியாளர்கள் 19 பேரும் மூன்று குழுக்களாக பிரிக்கப்பட்டு ஒவ்வோர் குழுவில் இருந்தும் அக்குழுக்களுக்குரிய நடுவர்களினால் பேச்சுத் திறமை அடிப்படையில் இருவர் தெரிவு செய்யப்பட்டனர். இவ்வாறாக பின்வரும் 6 மாணவர்களும் இறுதிப் போட்டிக்கு தெரிவு செய்யப்பட்டனர்.

1) Mr. T. Sivakumar, மானிப்பாய் இந்துக் கல்லூரி
2) Mr. S. Sureshkumar, கொக்குவில் இந்துக் கல்லூரி
3) Mr. M. Satheesbalamurugan, மகாஜனாக் கல்லூரி
4) Mr. E. Senthurselvan, யாழ் இந்துக் கல்லூரி
5) Miss K. Kayaledchumi, யாழ் இந்து மகளிர் கல்லூரி
6) Miss K. Renukapathi, சாவகச்சேரி இந்துக்கல்லூரி

இறுதியாக நடைபெற்ற பேச்சுப்போட்டிகளில்,

1) Miss K. Kayaledchumi, முதலாம் இடத்தையும்
2) Mr. M Satheesbalamurugan இரண்டாம் இடத்தையும்
3) Miss K. Renukapathi மூன்றாவது இடத்தையும் பெற்றுக் கொண்டனர்.

இவர்கட்கும் எமது பாராட்டுகள்

இறுதி நாள் நிகழ்விற்கு திரு. P. கந்தசாமி, கல்விப் பணிப்பாளர் வலயம் 2, யாழ்ப்பாணம், பிரதம அதிதியாக கலந்து கொண்டார். இவருக்கு எமது நன்றிகள்.

## JSA Publications for Sale

1. **Food and Food Habits**
   **Seminar Papers, 1992.**
   **Price Rs. 50/-**
2. **The need for reform in the Present system of education**
   **Seminar Papers, 1994.**
   **Price Rs. 100/-**
   **(only a limited number of copies are available)**

*Please contact :*

**The General Secretary,**
**JSA**
**University of Jaffna,**
**Jaffna,**
**Sri Lanka.**

**Changing your address?**
**Please print your new address and return to the Secretary.**

**Name:**...................................................

**Address:**...............................................

...............................................

...............................................


St. Joseph's Catholic Press, Jaffna



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org